# மதுரை ஹிந்தி எதிர்ப்புச் சங்கக் கூட்டம்.

## மே 12-ந் தேதி கூடும்

மதுரை, மே 9.

மதுரை ஜில்லா ஹிந்தி எதிர்ப்பு சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நாளது மே மாதம் 12ந் தேதி வியாழக் கிழமை மாலை 5-மணிக்கு மதுரை டவுன்ஹால் ரோடு ஹமதியா பில்டிங் மாடியிலுள்ள எக்கானமி ஸ்டோர் ரூமில்கூடும். ஹிந்தியை கட்டாயப்பாடமாக இந்த ஜில்லாவிலும் மாகாணத்திலுமுள்ள பள்ளிக்கூடங்களில் சர்க்கார் வைத்துவிட்டதால் அதை எதிர்க்க என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி முடிவு செய்யவேண்டியதிருப்பதால் கமிட்டி மெம்பர்களும், அபிமானிகளும் தவறாமல் கூட்டத்திற்கு வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். காரியதரிசி.